www.tamilarangam.net

EROS

P.O. Box 277, London N5 2DF

TAMIL SUPPLEMENT 04

10 June, 1986

# போராட்ட முன்னெடுப்பில் ஈரோஸ்

கேள்வி: ஈழ விடுதலையே எங்கள் முடிவான கொள்கை; இதற்குக் குறைவாக எதையும் ...ற்கமாட்டோம் என்னும் நிலைக்கும், அதற்குக் ...ருவியேந்திப் படைதிரட்டிப் போராடும் நிலைக் ...ும் நீங்கள் தள்ளப்பட்டதற்கான காரணத்தை ...ளக்குவீர்களா?

...தில்: எமது வரலாற்று வழி வந்த இரண் ...ாம் உலகப் போரையடுத்து பிரித்தானியாவி ...ருந்து இலங்கை சுதந்திரம் அடைந்ததாக ...றப்படுகிறது. இவர்கள் தமது முதலாளிய ...லன்களைத் தொடர்ந்து பாதுகாக்கக்கூடிய ...தேச மேட்டுக்குடி வர்க்கத்தினிடம் ஆட்சிப் ...பாறுப்பை கையளித்துச் சென்றனர். இவ் ...ாட்சிமாற்றத்தின் போது, தமக்கு உரிய பங்கு ...டைக்காதபோது, அதாவது சிங்கள அதிகார ...ர்க்கத்தினர் தமிழ் மேட்டுக்குடியினரோடு ...மது அதிகாரங்களைப் பங்கு போட சம்மதிக் ...த போது தனிக்கட்சியை யாழ்ப்பாணத் தமி ...ர் ஆரம்பித்தனர். இவர்கள் பிரித்தானிய ...ாராளுமன்ற முறையை ஏற்று அவ்வழியில் ...மது பிரச்சனைகளுக்கு (இதனை அவர்கள் தமி ...ர் பிரச்சனையாக உருவகப்படுத்தினர்) தீர்வு ...ண முற்பட்டனர். எனவே பாராளுமன்றத் ...தேர்தல் பாதையில் முழு மூச்சுடன் செயல்பட்டு ...மது வர்க்க குணநலன்களுக்கு ஒத்த சிங்கள ...தலாளிய கட்சியான ஐக்கிய தேசிய கட்சி ...ாடு இடைக்கிடை இணைந்தனர்; அமைச்சர் ...தவி வகித்தனர். தேர்தல் நெருங்கும்போது ...தவி விலகினர். பின் சேர்ந்தனர். இவ்வாறு ...யாஜால வித்தை காட்டியதால் மக்கள் காலப் ...ாக்கில் வெறுப்புற்றனர். இன்று தமிழ் ஈழக் ...ாரிக்கையை முன்வைத்து அதனைக் கவச ...க்கி அதன் மறைவில் தற்போது உயிர்தரித் ...ள்ளனர். ஆனால் இவர்கள் வித்தை காட்டிய ...லகட்டத்தில் நடந்ததென்ன? சிங்களப் ...ரினவாத முதலாளிய அரசு தமிழ்ப்பேசும் மக் ...ள வர்க்க ரீதியாக இனங்கண்டு இனமுலாம் ...ப்பட்ட; வகுப்புவாத வெறியூட்டப்பட்ட ...க்குமுறை வடிவங்களில் 1948, 49 களில் ...லயக தமிழ்ப்பேசும் உழைப்பாளி மக்கள் பேச ...ியற்று அனாதைகளாக்கப்பட்டனர். ...ாடர்ந்தும் கிழக்கில் இசுலாமியர் உட்பட்ட ...மிழ்ப்பேசும் மக்கள், சொந்த மண் பறிக்கப் ...டு அரசு உதவியோடு திட்டமிட்ட சிங்கள ...யேற்றங்கள் உருவாக்கப்பட்டு அப்பகுதியில் ...த்தொகை பரம்பல் முற்றாக மாற்றப்பட்டது. ...க்குவாழ் தமிழரின் வேலைவாய்ப்பு கல்வி ...ள் மறுக்கப்பட்டு, பண்பாட்டு கலாச்சார ...திருவல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந் ...வடிக்கைகள் யாவும் 1970 களில் படிப்படி ...க மிகத் தெளிவான பாரிய ஒடுக்குமுறை வடிவங்களைப் பெற்றன. இவ் வடிவமைப்பில் சிங்கள அரச படையினர் பெரும்பங்காற்றினர். இதனை எதிர்பார்க்காத மரபுவழி பூர்சுவா சன நாயக தலைமையினர் திணறினர்.

இவற்றினை அவதானித்த மாணவர் சமுதாயம் விழிப்புற்றது. ஒரு பகுதி இன உணர்வுமிக்க படையாயிற்று. ஒரு பகுதி பார்வையை, அகல மாக்கிற்று. மார்க்சியத்தைக் கற்று உணர்ச்சி களை உணர்வாக மொழிபெயர்த்து ஒடுக்கப் பட்ட மக்களின் விடிவே ஈழம் என அறை கூவிற்று. 1975இல் ஈரோஸ் உருவாகியது. தமிழ்ப்பேசும் மக்களின் பிரிக்கமுடியாத அங்கங் களாக இசுலாமியர் உட்பட்ட கிழக்கு தமிழ்ப் பேசும் மக்களையும் ஈழப் போராட்டத்தின் முது கெலும்பான மலையக மக்களையும் முன்னிருத்தி யது. ஈழம் என்பது சர்வதேச சோசலிச கட்டு மானத்தின் ஒரு பகுதி என்பதை விளக்கி இதனை யடைய விழிப்புணர்வின் ஒழுங்கு திரட்டப்படும் அடிப்படை மக்களின் ஆயுதப்போராட்டமே ஒரே வழி என முன்வைத்தது. அவ்வழியில் இன்று ஈரோஸ் தோழர்கள் கருவியேந்தி ஈழத்தில் எமது விடிவிற்காக தினமும் போராடி வருகின்றனர். எனவே இன்று ஈழப் போராட் டம் என்பது மூன்றாம் உலக நாடுகளில்— போராட்ட வரலாற்றில் ஓர் புதிய பரிமாணம் ஆகும். வர்க்க ஒடுக்குமுறைக்கு இன, மத, மொழிவெறிகளைப் பயன்படுத்தி வன்முறையை ஆயுதமாகக் கொண்டு நவகாலனித்துவத்தை புகுத்த முயலும் சிங்கள அரசிற்கு எதிராக சமு தாய மாற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு அதே சமயத்தில் இவ்வினத்தின் இயல்பான குண நலன்களையும் கணக்கிலெடுத்து அதன் தனித்தன்மையையும் பாதுகாத்து விஞ்ஞான அடிப்படையிலமைந்த சமூக மாற்றத்திற்கான ஆயுதப்போராட்டத்தில் நாம் இன்று ஈடுபட்டு வருகிறோம். இதுவே இன்றைய நிலை.

கே: இலங்கையில் படுகொலைகள் நடந்துகொண் டிருக்கிறபோது இயக்கங்களின் தலைவர்கள் மட் டும் இந்தியாவில் ஒதுங்கி சுகமாக இருக்கிறார் கள் என்கிற கருத்துடன் ஒரு வார ஏடுகூட கார்ட்டூன் போட்டிருந்ததே கவனித்தீர்களா?

ப: இந்தமாதிரியான கார்ட்டூனைப் பார்க்கும் போது அழுவதா சிரிப்பதா என்றே தெரிய வில்லை இலங்கையில் ரத்தமும் பிணமுமாக கிடக்கும் பாதையில் மிகுந்த சிரமங்களுக்கிடை யில் போய்க்கொண்டிருக்கும் எம்மைப்பார்த்து இவ்வாறு கூறுவது விஷமத்தனமானது. எம் மைப் பொறுத்தவரை தலைவர்கள் வேறு தொண் டர்கள் வேறு அல்ல. ஈழத்தில் போராடும் எங் களது தோழர்களுக்காக அவர்களது கஷ்டங்களை



••• 2



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


லகமெங்கும் புலப்படுத்துவதற்காக எங்க க்கு ஒரே பின்புலமாக இருக்கும் தமிழ் ாட்டில் தங்கியிருந்து செயலாற்றுவது ுரோகத்தனம் என்று யாரும் கூறிஞல் அவர் ள் யாரென்று தமிழக மக்கள்தான் அடை ாளங் காணவேண்டும்.

ே: இந்தியா இன்றைய நிலையில்—இந்தியா லையிட்டால்விபரீதம் பயங்கரமானதாயிருக்கும் ன்று ஜெயவர்த்தனே எச்சரித்திருக்கிற நிலை ில்—உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென திர்பார்க்கிறீர்கள்?

ப: சர்வதேச விடுதலை இயக்கங்களுக்கு அளித்த அங்கீகாரத்தை எமக்கும் அளித்து—மது மக்களுக்கு கௌரவமானதும் நிலையானது ான தீர்வுகாண முனையும் எங்களுக்கு எந்த திதமான நிபந்தனையுமற்ற ஆதரவளிப்பதே இந் ியா செய்யக்கூடிய மிகப்பெரிய உதவி.

கே: இயக்கங்களுக்குள்ளேயே சிலர் ஈழம் என் கிருர்கள் சிலர் தமிழ் ஈழம் என்கிருர்கள் இந்த வித்தியாசம் ஏன்?

ப: ''ஈழம்'' ''தமிழ்ஈழம்'' என்ற சொற்றொ ர்கள் பொதுவில் எமது தாயகத்தைக் குறிப் னவாக அமைந்த பொழுதும் இவற்றுக் டையே பாரிய தத்துவ ரீதியான வேறுபாடு இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். 1975 களில் தமிழ்த் தேசிய வாதம் படிப் படியாக கூர்மை டைந்த பொழுது ''தமிழ்ஈழம்'' என்ற தொடராக அது உருவகம் பெற்றது. ஆனல் இத்தேசிய வாதம் அக்காலகட்டத்தில் இஸ்லா ிய மக்களைப்பற்றி த்குந்த ஆய்வினை மேற்கொள் ாது மேலோட்டமாகவும் மலையக மக்களை ணக்கில் எடுக்காத தன்மையையும் கொண்டி ந்தமையால் இச்சொற்றொடர் ஒரு மக்கள் கூட் டத்தை ஒன்றிணைக்கும் சக்தி கொண்டதாக அமையவில்லை. இதன் விளைவு என்னவென்றல் ஆரம்பத்தில் இஸ்லாமிய மக்களும் மலையக க்களும் இத் ''தமிழ் ஈழக்'' கோரிக்கையிலி ந்து அந்நியப்பட்டதோடு அதனைச் சந்தேகிக் வும் தொடங்கிவிட்டனர்.

அதாவது இத்தொடர் ஒரு குறுகிய தேசிய வாதத்தைப் பிரதிபலிப்பதாக அவர்கள் மனதில் பதிந்து விட்டது. அதுமட்டுமன்றி இத்தொடர் ஒருபக்கம் மதச்சார்புடையது என்ற எண்ணமும் தோன்றி இருந்தது.

''தமிழும் சைவமும் இரு கண்கள்'', ன்ற மரபு ரீதியான கோட்பாட்டை யாழ்ப் ாண வேளாண் குடியினர் விசுவாசமாகப் பின் ற்றியதால் இத்தொடர் ஒரு சைவத் தன்மை ாய்ந்ததாக கருதப்பட்டது.

'இவை மட்டுமன்றி தமிழ்ப் பேசும் மக்களி டயே காணப்பட்ட உள் முரண் பாடான ாடிய சாதிப்பிரச்சனையைக் கூட இத்''தமிழ் ழம்'' என்ற தொடர் வளர்ப்பதாக அமைந்தது. ாடிய சாதி ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்ட ழ்த்தப்பட்ட தமிழ் மக்கள் ''தமிழ் ஈழம்'' ன்ற கோட்பாட்டை, அக் கோட்பாட்டை ன்வைத்தவர்கள் நிலைப்பாடு காரணமாக இத் தொடரின் கீழ் ஒன்றிணைய முடியாதவர்களாக ள்ளனர். ''தமிழ் ஈழத்தில்'' தங்கள் நிலை ன்ன அங்கும் தொடர்ந்து சாதி ஒடுக்கு றை நிகழும் தானே என்ற அவநம்பிக்கையை ் சொற்றொடர் ஆரம்பத்தில் இருந்தே ருவாக்கி வந்துள்ளது.




ஆகவே ஆரம்பத்தில் இருந்தே இப் பிரச் சினையை ஆராய்ந்த ஈரோஸ் இதுகுறித்து திட் டமான கருத்தின் அடிப்படையில் தமிழ்ப்பேசும் மக்கள் என்று நாம் குறிப்பிடும் இஸ்லாமியத் தமிழ்ப்பேசும் மக்களையும் மலையகத் தமிழ்ப் பேசும் மக்களையும் ஒன்றிணைக்கும் தன்மை வாய்ந்த உளவியல் ரீதியான பாதிப்புக்கள் அற்ற ''ஈழம்'' என்ற சொற்றொடரை முன் வைத்தோம்.

***எம்மைப் பொறுத்த வரையில் ''ஈழம்'' என்பது எவ்வித மத பிரதேச வேறுபாடுமற்ற இயங்கியல் ரீதியாக விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் உருவாக்கப்பட்டதாகும்.***

''தமிழ் ஈழம்'' என்ற சொல்லுக்கு ஏட்டிக் குப்போட்டியாக ''ஈழம்'' உருவாக்கப் டவில்லை வரலாறு கற்றவர்களுக்குத் தெரியும் ''ஈழம்'' என்பது நாகரீகத்தோடு வாழ்ந்த பழைய தமிழ்ச் சமுதாயத்தின் அடையாளப் பெயராகும். இப் பெயரானது வரலாற்றுத் தொன்மை வாய்ந்த ஓர் இனத்தின் பெருமைகளை மட்டும் குறிப்பதாக அல்லாமல் அதனுடைய வரலாற்றுந் தொன் மையையும் குறிப்பதைக் கணக்கில் கொண்டே ''ஈழமே எமது தாயகம்'' என்கிறோம்.

கே: தமிழீழ விடுதலை என்பது மலையகத் தமிழர்க்கும் சேர்த்துதானு ? இன்றெனில் தமி ழீழ விடுதலைக்குப் பின் அவர்கள் நிலையென்ன ? ஆமெனில் தடையாக உள்ள தொண்டமான் போன்ருேரின் பிடிப்பிலிருந்து இம் மக்களை எவ் வாறு விடுவித்து அவர்களை உங்கள் வழிக்குத் திருப்புவீர்கள் ?

ப: எமது இயக்கத்தைப் பொறுத்தளவில் மலை யக மக்களைக் குறித்து மிகத் தெளிவான நிலைப் பாடு உண்டு. 1970 களில் தமிழ்த் தேசிய வாதம் கூர்மை பெற்றபோது அது மலையக மக் களை கணக்கிலெடுக்காத தன்மையை நிரா கரித்து, இம்மலையக மக்களின் விடிவிலே தான் ஈழம்விடியுமென உறுதியாகக் கூறியதுஈரோஸ். ஏனையோரைப் போல மலையக மக்கள் அங்கும் வாழலாம். சிங்களவர்களோடு சேர்ந்தும் போராடலாம். வடக்கு கிழக்கிலும் வந்து குடி யேறலாம். அல்லது இந்தியாவிற்கு போனு லும் போகலாம் என சகட்டுமேனிக்கு கூற ஈரோஸ் தயாராக இல்லை. அவர்கள் தலை முறை தலைமுறையாக வாழ்ந்து வளப்படுத்திய மண் அவர்களுக்கே உரியது. அதனை அவர் கள் காக்க முன்னெடுக்கும் போராட்டமே ஈழப் போராட்டமாகும். அவர்கள் வாழும் நிலப் பகுதிகளும் அடங்கியதே ஈழம் ஆகும்.

இதற் காக புவியியல், அரசியல் வரலாறு ஆராயப் பட்டு வடக்கும், கிழக்கும், மலையகப் பகுதியும் உள்ளடக்கிய ஈழம் என்ற அரசியல் வரை யறையை முன்வைத்துள்ளோம். இம்மக்கள் ஈரோசோடு ஒன்றிணைந்து அரசியல் விழிப் புணர்ச்சி பெற்று ஈழப்போராட்டம் தமது விடி வையும் உள்ளடக்கியது என இசைந்து செயல் படுகின்றனர். சென்ற ஆண்டு நவம்பர் 15இல் மலையக தமிழ்ப்பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக ஏனைய வடக்கு கிழக்குவாழ் தமிழ்பேசும் மக்கள் தமது ஒருநாள் வாழ்வைத் தியாகம் செய்து தமது பூரண ஆதரவை வழங் கினர். அண்மையில் மலையகத்தில் நடந்த கல வரங்களின் போது இம்மக்களின் வீறுகொண்ட போராட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாத சிங் கள அரசு ஈரோசே எல்லாவற்றிற்கும் காரணம் என ஒப்பாரி வைத்தது ஆகியன எமது கருத் தின் வெற்றிக்கான நடைமுறை சான்றுகளா கும். அரசியல் அநாதைகளான இம்மக்களை வைத்து அரசியல் வியாபாரம் நடாத்தி அரசி யல் தலைவரான தொண்டமான் ஜே. ஆரின் எடுபிடியாகி நாள்தோறும் கொன்று குவிக்கப் படும் தமிழ் மக்களின் கண்ணீருக்குப் பதில் சொல்லும் காலகட்டம் நெருங்கி வருகிறது. மலையக மக்களை ஏனையோரிடமிருந்து பிரித்து தனிக்குழுவாக வைக்கவே தொண்டமான் பயன் பட்டார். ஆனல் இன்று நிலை மாறுகிறது. இதற்கான காரணங்கள் வருமாறு:

அ) ஈழத்தமிழ் பேசும் மக்களின் ஓர் அங்கமே இவர்கள் என்ற எமது கோட்பாடு நிலைபெறுவ தால் ஏற்படும் தாக்கம் ஒருபுறம்!

ஆ) அண்மையில் பிரசாவுரிமை தொடர்பாக ஏற்பட்ட ஒப்பந்தங்களின் பின் மலையகத்தில் தங்கியிருக்கப்போகின்ற மலையக தமிழ் பேசும் மக்களை சிங்கள தேசிய இனத்தின் ஒரு துணைக் குழுவாக மாற்றும் முயற்சிகள் நடைபெற்று வருவதால் ஏற்படப் போகும் தாக்கம் ஒருபுறம்.

இ) மலையக மக்களுக்கு எதிராக சில அரசு கட்சிகளால்(ஐ. தே. கட்சி உட்பட)மோசமான எதிர் கருத்தொன்று திரட்டப்பட்டு வருவதால் ஏற்படப்போகும் தாக்கம் மறுபுறம். ஜே.ஆர். அண்மையில் பிரசாவுரிமை தொடர்பாக செய்து கொண்ட ஒப்பந்தம் இம் மக்கள் மேலுள்ள பற் றின் காரணமாகவல்ல. பல காரணங்கள் இதற் குண்டு.

(1) தொண்டமான் தலைமைக்கு எமது செயற் பாட்டின் காரணமாக ஏற்பட்ட ஆபத்து மலை யகத்தில் உள்ள பயங்கரவாதிகளிடமிருந்து தொண்டமானைக் காப்பாற்ற வேண்டும் (அரசி யல் ரீதியாக) என்ற கருத்தை ஜே. ஆர். வலி யுறுத்திய பின்னரே சிங்கள அமைச்சரவை பிரசாவுரிமை ஒப்பந்தத்திற்கு இணங்கியது.

••• 3

**'இனவாதம்' கொண்டு பார்ப்பவர்களால் சமூக உண்மைகளை காண முடியாமல் போய்விடுவது யதார்த்தமானது.**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


) மலையக மக்கள் விடயம் தொடர்பாக இந்தியாவுக்கு உள்ள சட்டரீதியான தலையீட்டை இல்லாமல் செய்வதற்காக. எனவே இத்தகைய நிலையில் தொண்டமானால் மலையக மக்களின் போராட்டத்தை முன்னெடுக்க இனி முடியாது. ஏனென்றால் முதலாளிய நலன்கள் இனியெடுக்கப்படும் போராட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்படும். இன்று மலையக மக்கள் பெரும் பதட்டத்தின் மத்தியில் ஏறத்தாழ பணயக்கைதிகள் போல் வாழ்ந்து வருகின்றனர். புதிதாக இராணுவ முகாம்கள் மலையக பகுதியில் உருவாகி வருகின்றன. எனவே மக்களின் அடிப்படை வாழ்விற்கான போராட்டத்தில் தொண்டமானால் ஈடுபட முடியாது. இப் போராட்டத்திற்கான தலைமையை தொண்டமானால் தர முடியாது என்று இன்று இம் மக்கள் உணர்ந்து விட்டனர். இன்று மலையக மக்கள் தாம் யார் என்பதை உணர்ந்து விட்டனர். அவர்கள் அடிமனதில் இதுவரை இருந்து வந்த தாழ்வுச்சிக்கல் அகன்றுவிட்டது. அவர்களை எதிர்நோக்கிய உளவியல் தடைகள் இன்று அகன்றுவிட்டன.

மற்றது என ஈழத்தமிழ் மக்கள் இலகுவில் புரிந்துள்ளனர். கிழக்கில் எமது ஒற்றுமை கண்டு தான் இசுலாமிய மக்களோடு தகராறைத் தூண்ட சிங்கள அரசு முயன்று வருகிறது. இன்று இவற்றினை எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து இக்கலவரங்கள் தோன்றுவதை தவிர்க்க நாம் பெரும்பங்காற்றி வருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கே: தக்க முன்னெச்சரிக்கையும் வலுவுமின்றி விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, அதனால் இலங்கைக் கொடுங்கோலரசை உசுப்பிவிட்டுத் தமிழ் மக்கள் வீணேயும், வறிதேயும் கொன்றழிக்கப்படும் நிலைக்குத் தங்கள் போராட்டம் காரணமாகிவிட்டது என்று பொதுவாகக் கூறப்படுவதுகுறித்துத் தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?

யப்போவதில்லை. இது கசப்பான உண்மை. 1975இல் இருந்ததைவிட இன்று சிங்கள இராணுவம் ஈழப் பகுதிகளில் இறுக்கமாக வலுவூன்றுகிறது. 105 இராணுவ முகாம்கள் இன்று உருவாக்கப்பட்டு விட்டன. அதனைவிட விமானத்தாக்குதல் வேறு தொடர்கிறது. சிங்கள அரசு பலவீனப்படாத வரை அது தனது ஆட்சி பரிபாலனத்தை செலுத்தமுடியாத நிலை வரும்வரை சிங்கள கூலிப்படைகளை ஈழத்திலிருந்து அகற்ற முடியாது. அரசின் பொருளாதாரப் பலத்தை நொறுக்குவதன் மூலமே அதன் இராணுவ பலத்தை அழிக்க முடியும். சிங்கள அரசை பல முனைகளிலும் தாக்கி அதனை செயலிழக்கச் செய்வதே இராணுவ ஒடுக்குமுறையைக் குறைக்க முடியும். கொழும்பு நகரில் நாம் மேற்கொண்ட இராணுவத் தாக்குதல்கள் இலங்கையின் உல்லாசப் பயணத்துறை வருமானத்தை முற்றாக நாசமாக்கியதுடன் சிங்கள மக்களின் மனதிலே ஓர் பாதுகாப்பற்ற தன்மையை உருவாக்கி வருகிறது. மலையகம் வீறுபெற்று சிங்கள அரசுக்கு ஒத்துழைப்பு கொடுக்க



1 (CPC) oil storage facility at Anuradhapura

2 Central Telegraph Office Colombo

3 Air Lanka Tristar

கே: முசுலீம், கிறித்தவ சமயத்தைச் சார்ந்த ஈழத்தமிழர்கள் உங்கள் விடுதலைப் போராட்டத்தை எந்த அளவில் ஏற்கிறார்கள்.

ப: ஈழம் என்றும், தமிழ் பேசும் மக்கள் என்றும் நாம் வழங்கும் தொடர்கள் வெறும் பதப்பிரயோகங்கள் அல்ல. இசுலாமிய, கிறித்தவ மக்களை இணைக்கும் உளவியல் வலுக்கொண்ட சொற்றொடர்கள். இவைதான் இன்று கிழக்கில் ஈரோஸ், இசுலாமிய மக்களின் ஆதரவோடும் ஒப்புதலோடும் தான் செயற்பட்டு வருகிறது. வடக்கின் கரையோரங்களில், மன்னாரில் கிறித்தவ மக்களே எம்மை உயிர்வாழ்விப்போராவார்கள்.

ப: தாங்கள் கூறியது போல் எல்லாவித தயாரிப்போடும் ஒரு போராட்டம் ஆரம்பிக்கப்பட முடியாது. ஏதோ ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் மக்கள் ஓரளவிற்கு எல்லாவற்றையும் இழந்த நிலையில் இருந்துதான் போராட ஆரம்பிக்கின்றனர். இவ்வாறு தகுந்த தயாரிப்புகளோடு ஒரு போராட்டம் ஆரம்பித்ததாக வரலாறே இல்லை. ஆனால் போராட்டகாலப் போக்கின்போது தகுந்த முன்எச்சரிப்பும் அதுவரை எதிரியை உசுப்புவது ஆபத்து என்பதையும், அல்லது ஓர்அரசின் பலத்தை குறைத்து மதிப்பிடுவது முட்டாள்தனம் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றோம். ஈரோஸ் மிகத்தெளிவாக

மறுக்கும்போது சிறீலங்காவின் பொருளாதாரமே ஸ்தம்பிக்கும். அப்போது ஈரோசின் உண்மை துலாம்பாரமாக வெளிப்படும். ஆனால் இவைகுறித்து பூரண தெளிவில்லாமல் சில இயக்கங்கள் இருப்பதும் அதே சமயம் தமது இயலாமையை மறைக்க வேதாந்தம் பேசுவதும் துன்பத்துக்குரியது. எம்மைப் பொறுத்தவரையில் இன்று ஈழத்தின் மக்கள் முகங்கொடுக்கும் இராணுவ ஒடுக்குமுறைக்கு எதிராக செயற்பட வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே குறிப்பாக கிழக்கில் பல இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிட்டது. இது தற்பாதுகாப்புப் போராட்டமே; இது இராணுவத்தை உசுப்புவது

*அரசின் பொருளாதாரப்பலத்தை நொறுக்குவதன் மூலமே அதன் இராணுவபலத்தை அழிக்க முடியும், சிங்கள அரசை பலமுனைகளிலும் தாக்கி அதனை செயலிழக்கச்செய்வதே இராணுவ ஒடுக்கு முறையைக் குறைக்க முடியும்.*

ழப்போராட்டம் மார்க்சிய விஞ்ஞான அடிப்படையில் வகுக்கப்பட்டதால் எவ்வித மதச்சார்பு

கூறுகிறது "வடக்கு கிழக்கிலுள்ள பாதுகாப்புப் படைகளை மட்டும் தாக்குவதன் மூலம் ஈழம் விடி

அல்ல, இராணுவத்திற்குப் பாடம் புகட்டுவது. ...

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கே: இலங்கையிலிருந்து அகதிகளாக வந்த ர்கள் திரும்பிப் போய்விட வேண்டுமென்று ராஜீவ்காந்தி சொல்லியிருக்கிருரே?



: இலங்கைத் தமிழ் அகதிகளும் தம் தாயகம் சென்று வாழவே விரும்புகிருர்கள். தமிழ்நாட் க்குத் தொடர்ந்து பாரமாக இருப்பதை ங்கள் விரும்பவில்லை.

ஆனல் ஈழத்திற்குச் சென்று இயல்பான ாழ்க்கையை ஆரம்பிக்கக்கூடிய நிலைமை உரு ாகிவிட்டதா என்பதுதான் கேள்வி.

மேலும் எங்கள் கண்ணேட்டத்தில் தமிழ் ாட்டில் தங்கியிருக்கும் மக்கள் எவ்வளவு ிரைவில் சொந்த இடம் சென்று அடைய டியுமோ அவ்வளவு விரைவில் அடைவதையே ரும்புகிரேம். ஏனென்ருல் எங்கள் போராட் த்தைப் பொறுத்தவரை நாங்கள் கடலில் ாழும் மீன்கள். கடல் இருந்தால்தான் மீன்கள் ாதுகாப்பாக இருக்கமுடியும். அதுபோல் மக்க ில் தங்கி இருந்துதான் நாங்கள் போராடி ருகிரேம். பாதுகாப்புக்காரணம் கருதி மக்கள் இடம் பெயர்வதை நாம் புரிந்துகொண்டாலும் மது போராட்டத்திற்கு இது பாதகமான அம்சமாகும்,

எனவே மக்கள் மனதில் நம்பிக்கையும் அவர்கள் சொந்த வாழ்வில் பாதுகாப்பும்கொடுப் பதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபட்டு வருகிரேம்.

கே: இந்தமாதிரி இக்கட்டான சூழ்நிலையில் இலங்கையிலிருந்து வருபவர்களுக்குக் கூட ஈழம் பற்றி ஒரு உணர்வு பூர்வமான ஈடுபாடு இருக்கிறதே ஒழிய, விடுதலை இயக்கங்களில் யார்மீது நம்பிக்கை வைப்பது என்று தெரியா ல் ஒரு குழம்பின நிலை இருக்கிறதே?

மேய்வது போல் இந்தச் சம்பங்களை வைத்தே அனைவர்மீதும் வெறுப்படைவது சரியான அணுகுமுறை ஆகாது.

1970 ஆம் ஆண்டுக்குப் பின்னல் மத்தியதர வகுப்பு மக்கள் பெரும்பான்மையோர் வாழும் யாழ்பாணத்தில் மாணவர்களது உயர்கல்வி பாதிக்கப்பட்டமையால் அதனையே இனத்தின் ஒட்டு மொத்தமான பாதிப்பாகக் கருதி கொதிப் படைந்த இளைஞர் குழுக்கள் சில அதிதீவிர தனிமனித செயல்பாடுகளிலும் நிதிநெருக் கடிகளைச் சமாளிப்பதற்காக அரசு சொத்துக்களைக் கொள்ளையடித்தலும் ஆரம்பத்தில் நடந்தன.

ஆனல் காலக்கிரமத்தில் அவற்றிலிருந்து விலகிப் படிப்படியாக மலையகப் பாட்டா ளிகளுடன் கிழக்கில்வாழும் விவசாயிகளு டன் இணைந்து புரட்சியாளர்களாக மாறு வார்கள் என்று எதிர்பார்த்திருந்தோம். துர திர்ஷ்ட வசமாக வடமாகாணத்தில் தெளிவற்ற, உணர்ச்சிப் பூர்வமாக சிந்திக்கிற சில இளைஞர் குழுக்கள் சில வரம்பு மீறிய செயல்களில் ஈடு பட்டது உண்மை. ஆனல் இந்தமாதிரி உதிரி யாக நடக்கும் சம்பவங்களை வைத்து பொது மைப்படுத்தி விடக்கூடாது. எங்களைப் பொறுத்த வரை 75 ஆம் ஆண்டிலிருந்தே மிகத்தெளிவான கருத்து, பொருத்தமான தோழர்கள் என்றுதான் இயங்கி வந்திருக்கிரேம். மக்களோடு இணைந்து செயல்படுவதன் மூலமே நிதிப்பற்ருக்குறையைத் தீர்க்க முடியும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

கே: தமிழீழ விடுதலைப் போராட்டம் முழுமை யான மக்கள் போராட்டமாக ஆகிவிட்டது என்று கருதுகிறீர்களா? இன்றேல் அந் நிலைக்கு மக்களை அழைத்துச் செல்லத் தங்கள் திட்டம் யாது?

இதற்குத் தெளிவான தத்துவ அணுகுமுறையும் அதன் அடிப்படையில் அமைக்கப்பட்ட வேலைத் திட்டமும் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. ஆயினும் தற்போது தமிழ்த் தேசிய வாதம் மேலோங்கி நிற்பதனுலும், இன ஒடுக்கு முறை இனப்படுகொலை என்ற உச்சக்கட்டத்தை நோக்கி செல்வதாலும் உடனடி இராணுவ ஒடுக்குமுறைக்கு பாதுகாப்பு என்ற வகையில் தேசிய தன்மை வாய்ந்த இயக்கங்களோடு இணைந்து சில குறுகிய வேலைத்திட்டங்களை வகுத்துச் செயல்படுகின்ரேம். இதனை பூரண சமுதாய மாற்றம் என்ற எமது குறிக்கோளுக்கு குந்தகம் விளைவிக்காமல் இக்காலகட்டத்தை ஓர் இடைக்காலகட்டமாக கணித்து சகல ஒடுக்கு முறைக் கெதிராகவும் மக்களுக்கு அரசி யல் கல்வியூட்டி அணிதிரட்ட முயல்கின்ரேம்.

கே: தமிழீழச் சிக்கல் குறித்து இந்திய அர சும், தமிழக அரசும் சரியான அணுகுமுறை யுடன் உள்ளன எனக்கருதுகிறீர்களா? தமி ழீழப் போராளியர் இயக்கங்களை பி. எல். ஓ. வைப்போல் அங்கீகரிக்க முடியாது என இந்திய அரசு அறிவித்துள்ளதைப்பற்றித் தங்கள் கருத் தென்ன?

ப: ஈழப் போராட்டம் ஈழத் தமிழ்பேசும் மக் களாலேயே நடாத்தப்பட வேண்டும். இதற்கு பக்கபலமாக நல்லோர் உதவியை நாடிப் பெறு வது எம்கடன். அவ்வகையில் புவியியல் அரசி யல் அடிப்படையாக உறவுள்ள இந்திய—குறிப் பாக தமிழக, மக்களின் நல்லாதரவு எம்பக்கம் இருப்பதும் தாங்கள் அறிந்ததே. எனினும் மலையகம் தவிர்ந்த வடக்கு, கிழக்கு புவியியல் தரை தோற்றம் எமது போராட்டத்திற்கு ஓரளவிற்குப் பாதகமாக இருப்பதால் தமிழ கத்தை எமது போராட்டத்தின் பின்புலமாக ஆக்க நேரிட்டது. தமிழக அரசினதும், மத்திய அரசினதும் அரசியல் கொள்கை நிலைப்பாடுகள் அவர்களது அரசியல் வரையறுப்புகள் எமக்குப் புரியாததல்ல. எனவே எம்மை அங்கீகரிக்க முடி யாது என இந்திய அரசு அறிவித்தது ஓர் புதி னம் அல்ல. ஆயினும் எமக்கு அது துன்பத்தை அளித்துள்ளது என்பது உண்மைதான். கால ஓட்டத்தில் ஈழப்போராட்டம் தீவிரம் அடையும் போது இவர்கள் தங்கள் நிலைப்பாட்டை மாற் றக்கூடும். இதற்கு இங்குள்ள மக்கள் துணை அவசியமானது.

கே: தமிழ் போராளியர் இயக்கங்கள் அனைத் தும் ஒன்றிணைந்து போராடுவது குறித்துத் தங்கள் கருத்தையும் அதற்குந் தடையாக இருப் பது யாது என்றும் விளக்குவீர்களா?

ப: ஈழப் போராட்டம் இன்றைய காலகட்டத் தில் சிங்கள பேரினவாதிகளின் உச்சம் பெற்ற இன ஒடுக்குமுறை காரணமாக பரந்துபட்ட தேசியத்தன்மை மேலோங்கி நிற்பதாக உள்

## நாம் ஈழவர் நமது மொழி தமிழ் நம் நாடு ஈழம்

: ஈழத்தமிழர் போராட்டத்தில் தற்போதைய ாலகட்டம். ஒரு ஆரம்பக் காலகட்டம் ணர்ச்சி பூர்வமான ஈடுபாடு கொண்டவர்கள் லர் போராட்டத்தில் போராட முன்வருவதால் ல்வேறு இயக்கங்கள் தோன்றுகிற நிலைமை: தனல் எங்கள் மக்களிடையே ஒரு குழப்பநிலை ருப்பது உண்மை. ஆனல், தெளிவான வரை றுக்கப்பட்ட கொள்கைகள் ராணுவத்திட்டங் ளைக் கொண்டு செயல்படும் இயக்கத்தின் ன்னல் மக்கள் திரள்கிற காலம் விரைவில் ரும். அதற்கான அறிகுறிகள் இப்பொழுது தன்படுகின்றன.

: பொதுச்சொத்துக்களை கொள்ளை அடிப்பது ஆலயங்களில் திருடுவது என்கிற அளவில் ல இயக்கங்கள் செய்கிற வேலைகள் மக்களி டயில் ஒரு அதிருப்தியை ஏற்படுத்தி விடாதா?

: தற்போது நடக்கும் சில சம்பவங்களை வத்து இத்தகைய அதிருப்தி தென்படுவது மக்குப் புரிகிறது. ஆனல் வெறும் நுனிப்புல்

ப: ஈழப்போராட்டம் இன்று முழுமையான மக்கள் போராட்டமாக மாறும் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் மாண வர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் காலப்போக்கில் ஓரளவு முதிர்ச்சியுற்ற இளைஞர் கையில் இன்று உள்ளது. 1975 காலப்பகுதியில் மாணவராயிருந்தவர்கள் இன்று முதிர்ச்சியுள்ள இயக்கத் தலைமைகளில் இருக்கின்றனர். ஆனல் மக்கள் எனப்படுவோர் யார் எனக்குறித்து தெளிவான நிலைப்பாடு இல்லாமல் இன்று ஈழப் போராட்டம் மக்கள் போராட்டமாக மாறிவிட் டது என்று கூறும் நிலையை நாம் முற்ருக மறுக் கிரேம்.

உண்மையில் மக்கள் யார்? ஈரோ சைப் பொறுத்தவரையில் வர்க்க ரீதியாக நாம் அவர்களை இனங்காணுகின்ரேம். மலையகத்தின் உழைப்பாளிகள், கிழக்கில் விவசாயிகள், வடக் கில் தொழிலாளி மீனவர்கள் ஏனையபிறரையும் இணைத்து ஈழப்போராட்டம் முன்னெடுக்கப்படு வதை நாம் மக்கள் போராட்டம் என்கிரேம்.

ளது. தேசிய விடுதலைப் போராட்டமாக தற் சமயம் இது கணிக்கப்படுவதால் பல்வேறு பின் னணியும், நோக்கங்களும் உள்ள பல்வேறு சக்திகள் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு என்ற போர்வையில் ஈடுபடுகின்றன. இச்சக்தி கள் தமது நிலைப்பாட்டிற்கு ஏற்றவகையில் இயக்கங்களைத் தேர்ந்தெடுத்து பின்னின்று உதவி வருகின்றன, இதன் காரணமாக ஒரு விதமான கழுத்தறுப்புப்போட்டி இவ்வுதவி பெறும் இயக்கங்களிடையே காணப்படுகிறது. எனினும் இவற்றினையும் மீறி ஈழ தேசிய விடு தலை முன்னணி அமைக்கப்பட்டு ஓர் வேலைத்திட் டத்தின் கீழ் ஒருங்கிணைந்து செயற்பட முயற்சி கள் எடுத்தோம். ஆனல் தேசியவாதத் தன் மைகள் மேலோங்கிக் காணப்பட்ட, இயக்கங் களிடையே காணப்படும் தனித்தன்மையை மிகு தியாகவே பேணும் தன்மை ஒரு காலத்தில் ஒன்ருக இருந்து பிரிந்தமையினல் வரலாற்று ரீதியாக ஏற்பட்டுள்ள காழ்ப்புணர்ச்சி, அதன்

••• 5

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


விளைவால் தோன்றிய தலைமைப் போட்டி தமிழகத்திலும் ஒவ்வோர் பக்கச்சார்பாக இயக்கங்களுக்குக் கிடைத்த ஆதரவு ஆகிய காரணங்களினால் ஒற்றுமை முயற்சி வெற்றியளிக்கவில்லை. எம்மைப்பொறுத்தவரையில் தேசிய விடுதலைப் போராட்டம் முடியுமட்டுமாவது ஓர் ஐக்கிய முன்னணியை கட்டுவதன் அவசியத்தை தெளிவாகப் புரிந்துள்ளோம். எனவே இவ் ஐக்கிய முன்னணி குறித்து மனந்தளராமல் எமது முயற்சிகளைத் தொடரத் தயாராக இருக்கின்றோம். தொடர்ந்தும் வருகின்றோம்.

முகத்தை பிற்காலத்தில் அமெரிக்க கடற்படைத் தளமாக பயன்படுத்த அனுமதிப்பது (பிலிப்பைன்சில் எதிர்வரும் 5—10 வருடங்களுக்குள் ஏற்படப்போகும் மாற்றங்களை கணக்கிற் கொள்ளவும்). மேலும் திருகோணமலை பிராந்தியத்தை பல்தேசிய வர்த்தக கம்பெனிகளின் மூலதன முயற்சிகளுக்கு ஏற்றவகையில் (கனியக் கைத்தொழில், உல்லாசப்பயணத்துறை, எண்ணெய்க்குதங்கள்) மாற்றியமைத்தல். எனவே இத்தகைய நோக்கங்களுக்கு ஏற்ற வகையில் சிங்கள அரசு எடுத்துவரும் இராணுவ

A TAMIL extremist group yesterday admitted responsibility for the first time for blowing up an Air Lanka airliner in Colombo a month ago and claimed it could "hit wherever and whenever we want to."

The group, the Eelam Revolutionary Organisation (Eros), has brought a new dimension to Sri Lanka's Tamil ethnic unrest with a series of bomb attacks on economic and other targets in the capital of Colombo as well as in Tamil areas such as the eastern port of Trincomalee.

This contrasts with the activities of most other Tamil groups which tend to concentrate on attacks like that yesterday on an army supply route in the northern peninsular of Jaffna.

"We have stepped up our attacks for political reasons and our primary target is economic sabotage to bring pressure on the Government, and to hit back at the military in our areas" N. Shankar, a member of the Eros three-man executive revolutionary committee, based in the southern Indian city of Madras, said yesterday. The bombings "would not stop yet," he added.

"We do not go out to kill civilians and we try to have minimum casualties," said Mr Shankar, explaining that the Air Lanka deaths were "accidental and very unfortunate." The bomb should have "gone off earlier when no passengers were nearby."

★Koduvamadu, 36 commandos killed S.I. Veeratunga arrested.
★Kiran, 37 of the Sinhala armed forces killed.
★Koamari, 26 commandos killed. ........
★West German built propaganda machinery blasted
★Hotel Lanka Oberoi blasted

படுத்துவதும் இன்றும் நூற்றுக்கணக்கான எம் தோழர் சிறையுள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும் இன்று மலையகத் தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் புதிதாக இராணுவ முகாம்கள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக தொண்டமானின் தொகுதியான நுவரெலியா மாவட்டத்தில் இரண்டு பாரிய முகாம்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன. ஒருவித கொத்தடிமை முறையிலேயே மக்களை வைக்க முனைகின்றனர். இங்கு நாம் அரசியல் ரீதியாக விழிப்பு பெற்ற மலையகத் தோழர்களுக்கு தக்க இராணுவப் பயிற்சியளித்து தற்காப்புப் போராட்டத்திற்கு தயார்படுத்தியிருக்கின்றோம்.

சுருக்கமாகக் கூறின் சிறீலங்கா அரசு தனது இராணுவ வல்லாண்மையைப் பயன்படுத்தி மொத்த தமிழ்பேசும் மக்களை அடிமை நிலையில் தரகர்கள் தரும் சலுகைகளை பேச்சின்றி பெற்று வெறும் சோற்றுப் பிண்டங்களாக வைத்திருக்க முயல்கிறது. எமது சுய கௌரவத்திற்காகவும், சுதந்திர இருப்பிற்காகவும் வெற்றிவரை போராடுவது எமது இலக்கு என்பதனை இதன் மூலம் மிகவும் உறுதியுடன் நாம் பிரகடனப்படுத்த விரும்புகின்றோம்.

கே: தமிழகத் தமிழர்க்கும், பிற மாநில தமிழர்க்கும் தங்கள் இயக்கத்தின் சார்பில் விடுக்கும் வேண்டுகோளும், செய்தியும் என்ன?

ப: தமிழகத் தமிழராயினும் சரி, பிற மாநிலத் தமிழராயினும் சரி; எம்மவர்படும் இன்னல்கண்டு இரங்கிக் கண்ணீர்விட்டு தமக்கு வந்த துன்பம் போல் எண்ணி இரங்கி உதவும் பேரிலேயே. நாம் இன்று உயிர் வாழ்கிறோம். ஆனால் இவற்றையும் மீறி ஈழப்போராட்டம் சர்வதேச ரீதியாக ஏகாதிபத்திய கூட்டுச் சதிகளுக்கு எதிராக புதிய சமூக அமைப்பொன்றை உருவாக்க, புதிய மனித விழுமியங்களை உருவாக்க மனித நேயத்தின் அடிப்படையாய் அமைந்த போராட்டம் என்று உணர்ந்து இதன் ஆழ, அகல பரிமாணங்களைப் புரியுமாறு வேண்டுகின்றோம்.

அவ்வாறு புரிந்து கொண்டால்தான் இங்குள்ள கட்சிகளும், மாநில அரசுகளும். மத்திய அரசும் வெறும் சிங்கள இராணுவத்திற்கோ, சிங்கள மக்களிற்கோ எதிரான போராட்டம் அல்ல ஈழப்போராட்டம் என்பதை உணர்ந்து எம்மை ஒப்பேற்க முன்வருவர்.

கே: தமிழீழ விடுதலைப் போர்க்களத்தின் தற்போதைய நிலவரம் என்ன என்பதை விளக்குவீர்களா?

ப: ஈழ விடுதலைப் போர்க்களத்தின் நிலைமை வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய மூவிடங்களிலும் வெவ்வேறு தன்மை கொண்டுள்ளதாக அமைந்துள்ளது. இதற்கு பிரதான காரணம் சிங்கள பேரினவாத அரசு வெவ்வேறு தன்மை வாய்ந்த ஒடுக்குமுறைகளை பிரயோகிப்பதே ஆகும்.

வட மாகாணத்தில் ஆயுதப்படைகளின் முகாம்களை நன்கு பலப்படுத்தி பீரங்கிகள், சிறிய ஏவுகணைகள், சிறிய ரக டாங்கிகள் ஆகிய பல நவீனரக ஆயுதங்களைக் குவித்தும் வடக்கு நோக்கி குண்டு வீச்சு விமானங்களை குறிபார்த்து தயார்படுத்தி வைத்துக் கொண்டும் ஓர் இறுதி அழிவுத்தாக்குதலுக்கான சந்தர்ப்பத்திற்குக் காத்திருக்கின்றனர். தரையில் போராளிகள் முழு ஆதிக்கத்துடன் இருந்தாலும் பீரங்கித் தாக்குதலிலிருந்தும், விமான குண்டு வீச்சுத் தாக்குதலிலிருந்தும் மக்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளில் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் ஈடுபட்டுவருகின்றனர்.

கிழக்கிலோ நிலைமை முற்றிலும் வேறுபட்டது. சொந்த மண்ணுக்காக அங்கு தினந்தோறும் போராட்டம் நிகழ்ந்து வருகிறது. கிழக்கு மாகாணத்திற்கென இசுரேலிய மொசாட்டுகளாலும், பாக்கித்தானிய கொமாண்டோக்களாலும் பயிற்றுவிக்கப்பட்ட, இனவெறியூட்டப்பட்ட எஸ்.டி.எப். என அழைக்கப்படும் விசேட கமாண்டோக்கள் படை அமைக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு இசுரேல், மேற்கு யோர்தான் கரையிலிருந்து பாலஸ்தீனிய மக்களை அகற்றுவதற்காக தான் கையாண்ட வழிமுறைகள் யாவையும் கற்பித்துள்ளார்கள். இவர்கள் கையில் சிக்கி கிழக்கு மக்கள் படும் துன்பங்கள் எண்ணிலடங்கா. குறிப்பாக திருகோணமலை துறைமுகத்தைச் சுற்றி உள்ளும், புறமும் தமிழ் மக்கள் எல்லோரையும் அகற்றி அத்துறை

முயற்சிகளுக்கு ஈடுகொடுத்து தமிழ்ப்பேசும் மக்களை அம்மண்ணிலிருந்து அகற்றுமல் பாதுகாத்துக் கொள்ளும் தற்பாதுகாப்பு முயற்சிகளில் நாம் இன்று ஈடுபட்டு வருகிறோம். வடக்கு, கிழக்கிலிருந்து முற்றிலும் வேறுபட்ட நிலையில் மலையகத்தில் ஒடுக்குமுறை உள்ளது.

மலையகத்தின் பொருளாதார முக்கியத்துவம் கருதி இராணுவ அடக்குமுறை நேரடியாக கட்டவிழ்த்து விடப்படாவிட்டாலும் பலவிதமான மறைமுகமான ஒடுக்குமுறைகளுக்கு இம்மக்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. பல மலையகத் தோழர்கள் கைதானதும் சித்திரவதைப்


Wellawatte Police station

"The airliner attack was "economic" because it was aimed at driving tourists away from the islands.

Eros was responsible for the deaths of 12 security forces at the weekend when it planted a bomb on a train from the eastern city of Batticaloa. On Friday it bombed a Colombo food processing plant of Ceylon Cold Storage, killing ten civilians, and blew up a landmine near Trincomalee, killing 35 members of security forces.

He said that a bomb attack on a partly Japanese-owned cement factory in eastern Sri Lanka last week was a warning to multinational companies to stop "swindling" the people and to leave the island immediately.

Financial Times
Monday June 2 1986

**கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாய் உருவெடுக்கும்**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு புறத்தில் அரசாங்கம் யுத்தம் ஒன்றை பிரகடனப்படுத்தி தமிழ்பேசும் மக்களனைவரையும் ''பயங்கரவாதிகளாக்கி,'' எமதுமக்களை அழித்தொழிக்க கங்கணங்கட்டிச் செயற்பட்டு வருகின்றது. ஈழத்தின் தென்பகுதியில் அதாவது திருமலை மட்டக்களப்பு, அம்பாறைப் பிராந்தியங்களில் மிக மோசமாக தினமும் தேடுதல் என்ற போர்வையில் கைதுகளும், அழித்தொழிப்புநடவடிக்கைகளும் நடைபெற்ற வண்ணமாக எமது மக்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக-அனாதைகளாக நிர்க்கதிக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். ''அரசியல் தீர்வு'' காண்பது பற்றி அரசு உரத்துப் பேசி வரும் அதேசமயத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பெருமளவு நிதியும், அமெரிக்க ஆயுதக் கப்பல்களின் வருகையும், தொடர்ந்து இராணுவத்திற்கு ஆள் திரட்டப்படுதலும் போன்ற செயற்பாடுகள் அரசு எத்தகைய தீர்வைக் காண சித்தம் கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவு படுத்தும்.

நாட்டின் முழு மனித உழைப்பையும், வளங்களையும் ஒன்றுதிரட்டி புரட்சிகரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக செயல்படவேண்டிய இத்தருணத்தில் விடுதலைக்காகப் போராட புறப்பட்ட இயக்கங்கள் தமக்குள்ளே பலப்பரீட்சையில் இறங்குவதை மக்கள் நிச்சயமாக விரும்பமாட்டார்கள். ஏற்றுக்கொள்ளவும்மாட்டார்கள். எதிரியுடனான மோதலில் ஒன்றுபட வேண்டிய சக்திகள், தமக்குள்ளே மோதிக் கொள்வதனால் மக்கள் மத்தியில் வேதனையும் வெறுப்பும் ஏன் விரக்தியும் தான் மிஞ்சும். இன்றைக்கு விடுதலைக்காகப் போராடும் இயக்கங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பவை ஏதோ திடீரென தான்தோன்றித்தனமாக தோன்றிவிட்ட தலைமைகள் அல்ல என்பதை அனைவரும் அறிவர். அதே வேளையில் போராட்டம் என்பதும், மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்தல் என்பதும் ஏதோ ஒரு சில இயக்கங்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணியோடு-எத்தனையோ தடைகளையும், மேடுபள்ளங்களையும் தாண்டி, பாரிய இழப்புக்களைச் சந்தித்துத் தரித்து விடுதலைப் போராட்டத்தின் விழுப்புண்கள் பலவற்றைக் கொண்டிருப்பவையே இயக்கங்கள். இவை எதிர்காலத்தைப் பற்றிய தூர நோக்குடனும், தீர்க்கதரிசனத்தோடும் செயற்படவேண்டியது அத்தியாவசியமானது. இதற்கு மாறாக விடுதலைக்காகப் போராட நாங்கள் மட்டும்தான் உரித்துடையவர்கள் என்ற இறுமாப்போடு—எமது செயல்கள் மட்டும்தான், சரியானவை மற்றையவை அனைத்தும் விடுதலைப் போராட்டப் பாதையை திசைதிருப்பிவிடும் எனச் சில அமைப்புகள் சிந்திப்பது விவேகமாகாது. அதனால் சொந்த நலன்களை—ஆசாபாசங்களை மட்டுமன்றி குறுகிய ஸ்தாபன நலன் என்பதிலிருந்தும் விடுபட்டு பரந்துபட்ட பொதுமக்களின் மேன்மைக்காகவும், சமூகத்தின் இனத்தின் நன்மைக்காகவும் செயற்பட இயக்கங்கள் முன்வர வேண்டும். அப்போதுதான் எதிரிக்கு எதிரான யுத்தத்தில் ஐக்கியம் வலுப்பெறும். போராட்டமும் முன்னெடுக்கப்படும்.

போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற ஒரு அமைப்பின் பலம் என்பதை வெறுமனே ஆட்பலத்தை அல்லது விளம்பரத்தை மட்டும் கருத்தில் கொண்டு கணிப்பிடுதல் மிகமிகத் தவறானதாகவே இருக்கமுடியும். முதலாவதாக போராட்ட அணி முன்வைக்கும் அரசியல் கருத்துக்கள்; அவற்றிற்கு மக்கள் மத்தியில் கிடைக்கும் ஆதரவு; இந்தக் கருத்துக்களின் அரசியல் எதிர்காலம்; என்பவற்றைக் கவனத்தில் எடுக்கவேண்டும். இரண்டாவதாக இக் கருத்துக்களை நடைமுறைப்படுத்துவதற்கு இருக்கக் கூடிய வசதிகளும், வாய்ப்புக்களும், மூன்றாவதாக அமைப்பு ரீதியாகச் செயற்படுவதற்குள்ள நிதியாதாரங்கள். நான்காவதாக சர்வதேச ரீதியாக குறித்த அரசியல் கருத்துக்களின்




நாட்டின் முழு மனித உழைப்பும், வளங்களும் புரட்சிகரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படல் வேண்டும்

—லெனின்

தலைமை தாங்கும் கட்சியொன்றின் தலைமையின்கீழ் நடைமுறைப் படுத்தப்படும், ஒழுங்குபடுத்தப்பட்ட எழுச்சியில் மக்கட் போரில் ஈடுபடும் அரசியற்படையே நாட்டுக்கு விசுவாசமான உண்மையான படையாக விளங்கும். இதில் உண்மையில் புரட்சிகர வர்க்கங்கள், நிச்சயமாக நாட்டிற்கு விசுவாசமான குழு பல்வேறுபட்ட ஆதிவாசிகள் ஆகியோரை தொழிலாளர் தலைமையின் கீழ், தொழிலாளர் விவசாயிகள் என்ற தேசிய ஒருமைப்பாட்டின் கீழ் அமைக்கப்பட்ட அமைப்புக்கள் ஆகியன அடங்கும். இவை உண்மையில் போர் அமைப்புக்கு வேண்டிய முன்னணி, பின்னணி ஆகிய எல்லாப் பிரிவுகளுக்குமான புரட்சிகரபடை அமைப்பு பொருளாதார கலாச்சார இராணுவ, ஆன்மீக, அம்சங்களைக் கட்டியெழுப்பி வளர்த்துக் கொள்கின்றன.

—ஜெனரல் கியாப்

செல்வாக்கு. ஐந்தாவதாக ஆயுத ரீதியான பலமும் அமைப்பின் தோழர்களினது நேர்மையான அர்ப்பணிப்பும். இந்த அம்சங்களைச் சரியான முறையில் கணக்கிடுவதன் மூலமேதான் ஒரு இயக்கத்தின்—அமைப்பின் பலத்தை மட்டிட முடியும். அதில்லாமல் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? என்பதை மட்டும் கவனத்தில் எடுத்து இயக்கத்தின் பலத்தைத் தீர்மானிப்பது கஷ்டமான காரியமாகிவிடும். எதிர் காலத்தில் பாரிய தவறுகளுக்கு வித்திட்டுவிடும்.

இந்த நேரத்தில் ஈழப்புரட்சி அமைப்பு (EROS) தான் நடந்துவந்த பாதையையும், கடந்துவந்த தடைகளையும் மக்களோடு பகிர்ந்து கொள்ள விழைகின்றது. ஏனெனில் நாம ஒரே அமைப்பாக ஒன்றுபட்டுச் செயலற்ற தொடங்கிப் பத்து நீண்ட ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டது என்பதை மகிழ்ச்சியோடு நினைவு கூர்ந்து நாம் நடந்துவந்த பாதையில் பதித்து விட்ட காலடிச் சுவடுகளை தொட்டுக் காட்டுவது எந்த விதத்திலும் தவறாகிவிடாது. எழுபதுகளில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகள் தமிழ்பேசும் மக்களை விடுதலைபற்றி சிந்திக்க வைத்தது. இந்த அரசியல் சூழ்நிலையின் பாதிப்பிற்கு இலங்கையில் வாழ்ந்தவர்கள் மட்டுமன்றி வெளிநாடுகளில் குறிப்பாக இலண்டனில் வாழ்ந்த பலரும்கூட இலக்காகினர். இதன் விளைவாக தமிழ்பேசும் மக்களின் அரசியல், சமூகப் பொருளாதார நிலைமைகளைத் துல்லியமாக ஆராய்ந்த ஆய்வாளர்கள் பின்வரும் முடிவுகளை வந்தடைந்தனர்.

- இலங்கை வாழ் சகல தமிழ்பேசும் மக்களுக்கும் விமோசனமளிக்கக்கூடியது, ஈழத்தின் விடுதலையே.
- ஈழத்தின் விடுதலை என்பது வெறுமனே அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வது மட்டுமல்ல. சமத்துவ சமதர்ம சமுதாயம் ஒன்றை அமைக்கும் சோசலிச சமதர்ம அரசை நிறுவுவது என்ற இலக்கையும் உள்ளடக்கியது.
- மன்னார் முதல் மட்டக்களப்புவரை பருத்தித் துறை முதல் பதுளைவரை பொத்துவிலும் உள்ளடங்கிய ஈழப் பிராந்தியத்தில் வாழுமனைவரையும் பிரதேச, மத வேறுபாடுகளுக்கப்பால் ஈழவர் எனக்குறித்துக் காட்டியது. அதாவது 'நாம் ஈழவர்; நமது மொழி தமிழ்; நம் நாடு ஈழம்' என்னும் பதாகையினை உயர்த்திப் பிடித்தது.
- ஈழப் போராட்டம் சர்வதேச ரீதியாக முற்போக்குப் பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற போராட்டத்தின் ஒரு அங்கம் என்பதைத் தெளிவு படுத்தியதோடு ஆயுதம் தாங்கிய மக்களின் எழுச்சி ஒன்றே ஈழத்தின் விடிவைக் கொண்டுவரும் எனறு எடுத்தியம்பியது.

இத்தகைய கருத்துக்களை முன்வைத்து அணிதிரட்டலை ஆரம்பிக்க 75 ஜனவரி 3ல் ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) ஈழவிடுதலைக்காகத் தன்னை வரித்துக் கொண்டது. ஆரம்பத்திலேயே சர்வதேச ரீதியாகப் போராடும் சக்திகளின் ஆக்கப்பூர்வமான ஆதரவையும் பெற்றுக்கொண்டு, தன் அரசியல் வேலைகளை ஈரோஸ் ஆரம்பித்தது மிகமிகக் குறைந்த அளவு ஆயுதங்களோடும், இமாலயத்தையொத்த நம்பிக்கையோடும், அசாத்திய துணிச்சலும், செய்து முடி அல்லது செத்துமடி என்ற ஆக்ரோசமான அர்ப்பணிப்பும் கொண்டு ஈழப் போராட்டத்தில் தடம் பதிக்கப் புறப்பட்டபோது எம்மை நோக்கிவந்த தடைகள் பலப்பல. 'ஏனடா தமபி உங்களுக்கு இந்தவேலை' 'உருப்படுகிற வழியைப் பாருங்கோ' என்று இலவச ஆலோசனைகள் வழங்கிய பெரியார்கள் பலபேர். 'கறிக்குதவாத ஏட்டுச் சுரைக்காய்கள்' என்று கிண்டல் செய்தபடியே அவசர அவசரமாகக் களத்தில் இறங்கியோர் பலர். ஆயுத நடவடிக்கைகள் அற்ற அரசியல், நடைமுறையில்லாத சித்தாந்தம் என்று எம்மை ஏளனமாக விமர்சித்தவர் பலபேர். இலண்டனில் தலைமைப்பீடம் ஈழப் போராட்டத்தில் என்ன உருப்படியான பங்களிப்பை வழங்கும் எனக் குத்திக்காட்டிப் பேசியவர்கள் பலபேர். இப்படிப் பல கேள்விக்கணைகளுக்கும், விமர்சனங்களுக்கும், கேலிகளுக்கும், கிண்டல்களுக்கும் பதிலடி கொடுத்து மக்களுக்கு விடுதலைத்தாகத்தை ஊட்டி—போராட்டத்தில் நம்பிக்கையை விதைத்து; வளர்த்து எதிர்காலத்தினை எமதாக்கும் முயற்சியில் படிப்படியாக மெல்ல மெல்ல முன்னேறி வருகையில் எதிரியின் கவனம் எம்மீது திசை திரும்பியதால் பாரிய இழப்புகளையும் சோகங்களையும் தாங்கிக்கொள்ள வேண்டியவர்களானோம்.

ஆரம்பம் முதலே ஆயுதம் தரித்த அடாவடித்தனக்காரர்களின் ஆயுதமிரட்டலுக்கு மத்தியில் கொலை, கொள்ளைச் செயல்கள் போன்ற அராஜகமான மக்கள் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும், ஆயுதக்கிளர்ச்சிக்கும், பயிற்சி மோகத்திற்கும் அப்பால் மக்களை அரசியல் மயப்படுத்தும் பணியில் ஈடுபட்டோம். வெற்றிகண்டோம். கடந்த பத்தாண்டுகளாகச் செயற்பட்டு வரும் நாம் அரசியல் ரீதியாகப் பின்வரும் வெற்றிகளைக் கண்டிருக்கின்றோம் என்பதனையிட்டு பெருமை கொள்ள முடியும்.

- ஈழப்போராட்டம் என்பது பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் ஒரு அங்கம் என்பதால்; மார்க்சிச—லெனினிய சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதும் அதனை எமது மண்ணில் நடைமுறைப் படுத்துவதும் அத்தியாவசியமானது என அடித்துக் கூறினோம். இதனால் இன்று அனைத்து போராளிகளுமே தவிர்க்க முடியாதவாறு சிவப்புச் சாயம் பூச நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். போலியாக வேனும் தாமும் இடதுசாரிகள் தான் என்பதை உறுதிப் படுத்த வேண்டியவர்களாயுள்ளனர்.
- மலையக மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஈழப் போராட்டமே வழிவகுக்கும் என முரசறைந்தோம். மலையக மக்களின் சிக்கல்களைத் தீர்க்க ஈழத்தின் ஏனைய பிராந்திய மக்கள் குரல் கொடுக்க வேண்டும்—போராட்டத்தில் ஒரு ஐக்கியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என எடுத்தியம்பினோம்—வெற்றி கண்டோம்.
- ''நாம் ஈழவர்; நமது மொழி தமிழ்; நம் நாடு ஈழம்'' என்ற பதாகையினை உயர்த்திப் பிடித்து பிரதேச, மத வேறுபாடுகளுக்கப்பால் ஈழத்தில் வாழுமனைவரும் ஈழவரே எனக்கூறிய போது மக்கள் அணியணியாகத் திரள்வதைக் கண்டு வருகின்றோம். எமது கருத்துக்களும், செயற்பாடுகளும் மக்கள் மத்தியில் பெரு வரவேற்போடு வேரூன்றி ஆழப்பட்டு அகலப் பட்டுவருவதனைக் காண்கிறோம்.
- அடுத்ததாக, தற்பாதுகாப்புக் காரணங்களுக்காகவும், இராணுவத்தினரின் கவனத்தைத் திசை திருப்புவதையும் மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகளின் ஊடாக, ஆயுதங்கள் பலவற்றைச் சேகரித்திருப்பதோடு மக்களுக்கு மக்கள்இராணுவத்தின் நடவடிக்கைகளில் நம்பிக்கை ஊட்டுவதிலும் கணிசமான அளவு வெற்றியைப் பெற்றிருக்கின்றோம்.
- ஈழப்போராட்டத்தில் இந்திய அரசிற்கும், தமிழகத்திற்கும இருக்கக்கூடிய காத்திரமான பங்கைக் குறித்து தெளிவுடன் செயலாற்றுவதனால், இந்திய அரசின் ஆக்கப் பூர்வமான ஒத்துழைப்புகளையும், ஒத்தாசைகளையும் பெற்றுக் கொள்வதிலும் பயன் தரும் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

இத்தகைய எமது வெற்றிகளைப் பற்றிப் பெருமைப்படும் அதேசமயம் எதிர்காலத்தில் எம்மீது சுமத்தப்பட்டிருக்கும் பாரிய பொறுப்புக்களையும் உணர்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த நேரத்தில் இன்று எம்மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு ஏற்றவர்களாகவும் மக்களது எதிர்பார்ப்புகளையும் அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக்கூடியவர்களாகவும் பரிணமிக்கவேண்டியது அத்தியாவசியமானது. சுருங்கக் கூறின் எமக்குள்ள அதிகாரம் என்பது அராஜகத்தின் கருவியல்ல. மாறாக நிர்வாக அமைப்புகளைச் சீர்படுத்தி ஒரு புதிய சமுதாய அமைப்பைப் படைக்க மக்கள் அளித்திருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடுகள் என்றே கருத வேண்டும்.

ஈழமெங்கிலும் வாழும் மக்களின் நல்லெண்ணத்தையும், அபிமானத்தையும் பெற்றவர்களாக — ஈழப் போராட்டத்தின் தீர்மானகரமான சக்தியாய் பரிணமிக்க வேண்டிய நாம் அதற்கேற்ற வகையில் மிகவும் பொறுப்புணர்வுடனும், நிதானமாகவும் நடந்து கொள்வோமாயின் எதிர்காலம் எமக்காகும். இத்தவகையில் போராட்டத்தை முன்னெடுக்கும் வழிமுறைகள், எமது போராட்டதந்திரோபாயங்கள் குறித்தும் பின்னர் விரிவாக ஆராயலாம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்